# உலகம்

## ஐ. நா. பொது சபையில் ரஷ்ய தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு

- ஐ. நா. பொதுச் சபையில் நாஜி கொள்கைக்கு எதிராக ரஷ்யா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளித்தது. 106 நாடுகளின் ஆதரவுடன் ரஷ்யாவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ஐ.நா. சபையில் சர்வதேச பாதுகாப்பு பொருளாதாரம், சமூக, கலாச்சார, மனித உரிமைகள், அரசியல், நிர்வாகம், நீதி என 6 குழுக்கள் உள்ளன. இதில் சமூக – கலாச்சார - மனித உரிமைகள் குழுவின் கூட்டம் ஒவ்வோர் ஆண்டும் நவம்பரில் நடைபெறும்.
- இந்தக் கூட்டத்தில் உறுப்பு நாடுகள் கொண்டு வரும் தீர்மானங்கள் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன்படி, ரஷ்யா சார்பில் நாஜி, நவீன நாஜி, இனவாத ஒழிப்பு தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்பட்டது. பாகிஸ்தான், வடகொரியா, சிரியா, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவுடன் இணைந்து இந்த தீர்மானத்தை தயார் செய்தன.
- இந்தக் கூட்டத்தில் இந்திய தூதர் ருசிரா கம்போஸ் பங்கேற்றார். பின்னர் இந்தியா உள்ளிட்ட 106 நாடுகள் ரஷ்யாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேறியது. அமெரிக்கா உட்பட 52 நாடுகள் எதிராக வாக்களித்தன. 15 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

## ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்

- ‘ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்’ எனற் கருப்பொருளையும், தாமரை இலச்சினையையும் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

- ஜி 20 அமைப்பு கடந்த 1999 இல் தொடங்கப்பட்டது. இதில் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சீனா, இந்தியா, கனடா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா, சவுதி அரேபியா, தென் கொரியா, மெக்சிகோ, இத்தாலி, இந்தோனேசியா, பிரேசில், ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
- சர்வதேச அளவில் நிதி, எரிபொருள் பயன்பாடு உட்பட பல்வேறு முக்கிய அம்சங்களில் பரஸ்பரம் ஒத்துழைப்பு, உதவிகள் செய்யும் நோக்குடன் ஜி 20 அமைப்பு உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பின் தலைமை தற்போது இந்தோனேசியாவிடம் உள்ளது. வரும் டிசம்பர் 1 ஆம் தேதி ஜி 20 தலைமையை இந்தியா ஏற்கிறது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி, ஜி 20 தலைமைக்கான இலச்சினை (லோகோ), கருப்பொருள், இணையதளத்தை 8-11-2022 அன்று வெளியிட்டார்.
- ஜி 20 அமைப்பின் தலைமையை இந்தியா ஏற்பது நம் நாட்டுக்கு கிடைத்துள்ள வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பு இது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கும் விஷயம்.
- ஜி 20 இலச்சினைக்காக ஆயிரக்கணக்கானோர் புதுமையான வடிவங்களை அரசுக்கு அனுப்பினர். இதில் இருந்து தாமரை மலரில் பூமி வீற்றிருக்கும் சின்னம் இறுதி செய்யப்பட்டது.
- ‘உலகம் ஒரே குடும்பம்’ என்ற இந்தியாவின் பாரம்பரியம், நம்பிக்கை, சிந்தனையை தாமரை குறிக்கிறது. போரில் இருந்து உலகம் விடுதலை பெற வேண்டும் என்ற புத்தரின் போதனை, தேசத் தந்தை மகாத்மா காந்தியின் அகிம்சை கொள்கையையும்

தாமரை சின்னம் பிரதிபலிக்கிறது. அதன் 7 இதழ்கள் 7 கண்டங்களையும், 7 இசையையும் குறிக்கின்றன.

- ஒரே சூரியன், ஒரே உலகம் என்ற இந்தியாவின் கொள்கை உலகின் எரிசக்தி துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. 'ஒரே பூமி, ஒரே ஆரோக்கியம்' என்ற இந்தியாவின் சுகாதாரக் கொள்கையும் சர்வதேச அளவில் போற்றப்படுகிறது. இந்த வரிசையில் ஜி 20 அமைப்புக்காக 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை தேர்வு செய்துள்ளோம்
- ராஜஸ்தான், குஜராத், கேரளா, மத்திய பிரதேசம், மேற்கு வங்கம், தமிழகம், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் விருந்தோம்பலுக்கு புகழ் பெற்றவை. அந்த வகையில், ஜி 20 அமைப்பின் நிகழ்ச்சிகள் தலைநகர் டெல்லி மட்டுமின்றி, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நடத்தப்படும்.
- ஜி 20 அமைப்பின் 17 வது உச்சி மாநாடு இந்தோனேசியாவின் பாலி தீவில் நடைபெற்றது. இதில் 20 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியா சார்பில் பிரதமர் மோடி ஜி 20 மாநாட்டில் பங்கேற்றினார். வரும் 14 ஆம் தேதி முதல் 16 ஆம் தேதி வரையில் மாநாடு நடைபெற்றது.

## ஓராண்டுக்கான பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைப்பு

- பாலி தீவில் நடந்த ஜி 20 உச்சி மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில், ஜி 20 நாடுகளின் தலைமை பொறுப்பை பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டார். இந்தியாவின் தலைமையில் ஜி 20 அமைப்பு லட்சியமிக்கதாக, தீர்க்கமானதாக, சிறப்பாக செயல்படும் என்று உறுதி அளித்தார்.

- ஜி 20 அமைப்புக்கான தலைமையை அதன் உறுப்பு நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஏற்கும். கடந்த ஓராண்டாக இந்த பொறுப்பு இந்தோனேசியாவிடம் இருந்தது. அதன் தலைமையின் கீழ் ஜி 20 அமைப்பின் 17 வது உச்சி மாநாடு நவம்பர் 16, 2022 அன்று நிறைவு பெற்றது.
- இந்நிலையில் அடுத்த ஓராண்டுக்கான ஜி 20 அமைப்பின் தலைமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ நவம்பர் 16 தேதியன்று ஒப்படைத்தார்.
- வரும் டிசம்பர் 1 ஆம் தேதி முதல் ஜி 20 அமைப்பின் செயல்பாடுகளை இந்தியா முறைப்படி தொடங்குகிறது. ஜி 20 அமைப்பின் அடுத்த உச்சி மாநாட்டை தலைநகர் டெல்லியில் 2023 செப்டம்பரில் இந்தியா நடத்த உள்ளது.
- புவிசார் அரசியல் பதற்றம், பொருளாதார மந்தநிலை, உணவு மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு, கரோனா பெருந்தொற்றின் நீண்ட கால பாதிப்புகள் ஆகியவற்றை உலகம் ஒரே நேரத்தில் சந்தித்துள் வேளையில், ஜி 20 அமைப்புக்கான தலைமை பொறுப்பை இந்தியா ஏற்கிறது.
- அமைதி நல்லிணக்கம் என்ற வலிமையான தகவலை ஜி 20 அமைப்பு தெரிவிக்க வேண்டும். இந்த அனைத்து முன்னுரிமைகளும், இந்தியாவின் தலைமையிலான ஜி 20 அமைப்பின் கருபொருளான 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதில் அடங்கியுள்ளது.

## 3000 இந்தியருக்கு விசா வழங்க இங்கிலாந்து ஒப்புதல்

- ஜி 20 உச்சி மாநாட்டுக்கு இடையே இங்கிலாந்து பிரதமர் ரிஷி கனக்கை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். அப்போது இங்கிலாந்தில் இந்தியர்களுக்கான வேலை

வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கூடுதல் விசா வழங்க இங்கிலாந்து பிரதமர் ரிஷி சம்மதம் தெரிவித்தார்.

- இந்த சந்திப்பு நடந்த சில மணி நேரங்களில், இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'படித்த இந்திய இளைஞர்களுக்கு இங்கிலாந்தில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஆண்டுக்கு 3,000 இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு விசா வழங்கப்படும், பட்டப்படிப்பை முடித்த 18 - 30 வயது இந்திய இளைஞர்கள் இங்கிலாந்தில் தங்குவதுடன், 2 ஆண்டுகள் வரையிலான வேலைவாய்ப்பையும் அவர்கள் பெறலாம்' என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக எகிப்து அதிபர் பங்கேற்பு

- இந்திய குடியரசு தின விழாவை முன்னிட்டு டெல்லியில் நடைபெறும் சிறப்பு அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு நட்பு நாடுகளின் தலைவர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பது வழக்கம்.
- கடந்த சனவரியில் நடந்த குடியரசு தின விழாவில் 5 மத்திய ஆசிய குடியரசு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் டெல்லியில் நடந்த இந்தியா - மத்திய ஆசிய மாநாட்டில் பங்கேற்றனர்.
- பிரதமர் மோடியின் இந்த அழைப்பை எகிப்து அதிபர் அல்-சிசியிடம் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த அக்டோபர் 16 ஆம் தேதி வழங்கினார். அதை அவர் ஏற்றுக் கொண்டார்.
- இரு நாடுகள் இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டு இந்தாண்டுடன் 75 ஆண்டுகள் ஆகிறது. இந்தியா தலைமையில் 2022 – 23 ஆம் ஆண்டில் நடைபெறும் ஜி 20

கூட்டத்தில் விருந்தினராக கலந்து கொள்ளும் எகிப்துக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

## உக்ரைன் ராணுவம் ஏவிய ஏவுகணை போலந்தை தாக்கியதால் பதற்றம்

- ரஷ்யா, உக்ரைன் இடையே கடந்த 7 மாதங்களுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது. நவம்பர் 15 அன்று உக்ரைன் எல்லையில் இருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள நேட்டோ அமைப்பின் உறுப்பு நாடான போலந்தின் ஒரு கிராமத்தில் ஒரு ஏவுகணை தாக்கியதில் 2 பேர் உயிரிழந்தனர்.
- இந்த ஏவுகணை ரஷ்யாவின் தயாரிப்பு என போலந்து வெளியுறவு அமைச்சகம் குற்றம் சாட்டியது.
- இதனிடையே, இந்தோனேசியாவின் பாலி தீவில் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் பங்கேற்றுள்ள உலக தலைவர்களுக்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் நவம்பர் 16 நடந்த அவசர ஆலோசனைக் கூட்டத்தின் நேட்டோ உறுப்பு நாடுகள் மற்றும் ஜப்பான் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- கூட்டத்துக்குப் பிறகு ஜோ பைடன் கூறும் போது, "அந்த ஏவுகணை ரஷ்யாவில் இருந்து ஏவப்பட்டது இல்லை என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது" என்றார்.

# இந்தியா

## மான்கட் தாம்

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவம் நடப்பதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பழங்குடியினரின் படுகொலைக்காக மான்கட் தாம்

இன்றளவும் நினைவு கூறப்படுகிறது. இது சில சமயங்களில் 'ஆதிவாசி ஜாலியன் வாலா' என்றும் அழைக்கப்படுகிறது.

- 1913 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி ராஜஸ்தான் மற்றும் குஜராத்தின் எல்லையில் உள்ள மான்கட் மலைகளில் நூற்றுக்கணக்கான பில் இன பழங்குடியினரை பிரிட்டிஷ் படைகள் கொன்றன.
- இந்த படுகொலையில் மொத்தம் 1,500 பழங்குடியினர் கொல்லப்பட்டனர். ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த பழங்குடியினர் இந்த இடத்தை புனிதமான இடமாகப் போற்றுகின்றனர். மேலும் இது பழங்குடியினர் அடையாளத்தின் முக்கிய அங்கமாகவும் திகழ்ந்து வருகிறது.
- இந்நிலையில் 01.11.2022 இல் பன்ஸ் வாரா மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு மான்கட் தாம் பகுதியை தேசிய நினைவுச் சின்னமாக அறிவித்தார்.

## சிறுபான்மையினருக்கு குடியுரிமை

- பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வந்த சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- குடியுரிமை திருத்தச் சட்டம் (Citizenship Amendment Act – CAA) நாடாளுமன்றத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக போராட்டங்கள் நடந்தன. குடியுரிமை திருத்த சட்டத்துக்கான விதிமுறைகள் வகுக்கப்படாததால் அது இன்னும் அமல்படுத்தப்படவில்லை.
- கரோனா பெருந்தொற்று காரணமாக குடியுரிமை திருத்தச் சட்ட விதிமுறைகளை (Citizenship Amendment Act – CAA) உருவாக்க கால தாமதம் ஆனது. 7 வது

முறையாக மாநிலங்களவை குழுவுக்கு டிசம்பர் 31 ஆம் தேதி வரையும், மக்களவை குழுவுக்கு அடுத்தாண்டு ஜனவரி 9 ஆம் தேதி வரையும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- குஜராத்தின் ஆனந்த் மற்றும் மெஹசனா ஆகிய மாவட்டங்களில் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வந்த இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், ஜெயின்கள், பார்சி மற்றும் கிறிஸ்தவர்கள் தங்கியுள்ளனர்.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை வந்த இவர்களுக்கு குடியுரிமை அளிக்க மத்திய அரசு விரும்புகிறது. குடியுரிமை திருத்த சட்டம், 2019 (Citizenship Amendment Act – CAA) விதிமுறைகள் இன்னும் உருவாக்கப்படாததால், இவர்களுக்கு குடியுரிமை சட்டம் 1955 ஐந்தாவது பிரிவின் கீழ் குடியுரிமை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இவர்கள் மாவட்ட ஆட்சியரிடம் தங்கள் விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கும்படி மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதை மாவட்ட ஆட்சியர் சரிபார்த்து குடியுரிமை சான்றிதழ் வழங்குவார்.

## 10 சதவீத இட ஒதுக்கீடு செல்லும்

- பொருளாதாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினருக்கான 10 சதவீத இட ஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தினேஷ் மகேஷ்வரி, பேலா எம். திரிவேதி, ஜே. பி. பர்திவாலா ஆகியோர் 10 சதவீத இட ஒதுக்கீடு செல்லும் என்றும், தலைமை நீதிபதி யு.யு.லலித், நீதிபதி ரவீந்திர பட் ஆகியோர் மாறுபட்ட தீர்ப்பையும் வழங்கியுள்ளனர்.

- இந்தியாவில் கல்வி, வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு (OBC) 27 %, தாழ்த்தப்பட்டோருக்கு (SC) 15 %, பழங்குடியினருக்கு (ST) 7.5 % இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- இந்நிலையில் பொருளாதாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் 103 வது அரசியலமைப்பு திருத்தத்தை மத்திய அரசு 2019 இல் நிறைவேற்றியது.
- 2020 ஆம் ஆண்டில் அப்போதைய தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்தே தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. பின்னர் அதே ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதி 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது.
- விசாரணையின் போது இட ஒதுக்கீடு 50 சதவீதத்தை தாண்டக் கூடாது என்று கடந்த 1992 இல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மனுதாரர்கள் சுட்டிக் காட்டினர்.
- இதற்கு மத்திய அரசு அளித்த விளக்கத்தில் “தற்போது பொதுப் பிரிவில் உள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கே 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. எனவே 50 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது” என்று தெரிவிக்கப்பட்டது.
- ஐந்து நீதிபதிகள் அமர்வில் நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, பேலா எம்.திரிவேதி, ஜே.பி.பர்தி வாலா ஆகியோர் பொருளாதாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத் திருத்தம் செல்லும் என்று தீர்ப்பளித்தனர்.

## சர்வதேச புதுமை கண்டுபிடிப்பு கோவாவில் கண்காட்சி

- சர்வதேச புதுமை மற்றும் கண்டுபிடிப்பு கண்காட்சி, 2022 தெற்கு கோவாவில் உள்ள மார்கோ நகரத்தில் நவம்பர் 17 தேதியன்று தொடங்கியது.
- இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 238 புத்தாக்க நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளன. மேலும் 104 புதிய கண்டுபிடிப்புகளும் மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- குறிப்பாக போலந்து, ரஷ்யா, ஈரான், சவூதி அரேபியா, ஸ்பெயின், தாய்லாந்து, மக்காவ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 37 நிறுவனங்கள் இந்த கண்காட்சியில் பங்கேற்று தங்களது புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளன.
- மாநில அரசு புத்தாக்க நடவடிக்கைகளுக்கு என்றுமே துணை நின்று வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே, 2022 ஆம் ஆண்டு முதல் 100 இந்திய கண்டுபிடிப்புகள் புத்தகம் இந்த கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இளைய தலைமுறையினர் ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளது. மிகவும் பாராட்டுக்குரியது. அடுத்த ஆண்டு நடைபெறும் இந்த கண்காட்சியில் இடம்பெறும் 50 சதவீத கண்டுபிடிப்புகள் கோவா மாநிலத்தை சார்ந்ததாக இருக்க வேண்டும்.

# சுற்றுச்சூழல்

## பருவநிலை பாதிப்புக்கான இழப்பீடு நிதிக்கு ஒப்புதல்

- ஐ.நா. பருவநிலை மாற்றத்தின் 27 வது மாநாடு (COP 27) எகிப்தில் கடந்த நவம்பர் 6 ஆம் தேதி முதல் நவம்பர் 20 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- பருவநிலை மாற்ற பாதிப்புகளை சமாளிக்க புதிய நிதி தொகுப்பை உருவாக்க வேண்டும் என ஏழை நாடுகள் மற்றும் இந்தியா உட்பட வளரும் நாடுகள் நீண்ட

காலமாக கோரிக்கை விடுத்து வந்தன. ஆனால் இது குறித்த திட்டம் COP 27 வரைவு அறிக்கையில் இடம் பெறாமல் இருந்தது.

- மாநாட்டில் பங்கேற்று பேசிய மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூ.பேந்தர் யாதவ், “சிறு விவசாயிகளுக்கு வேளாண்மை முக்கிய வாழ்வாதரமாக உள்ளது. பருவநிலை மாற்ற பாதிப்புகளால் கடுமையாக பாதிக்கப்படுவர் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வெள்ளம் மற்றும் இதர பாதிப்புகள் விவசாயிகளுக்கு சுமையாக இருக்க கூடாது” என்றார்.
- பருவநிலை மாற்றத்தில் வளர்ந்த நாடுகள் முன்னணியில் உள்ளன. பருவநிலை மாற்றத்துக்கு தீர்வு காணும் வகையிலான வாழ்க்கை முறைக்கு மாற முடிவெடுத்துள்ளதையும் வரவேற்கிறது இந்தியா. நீடித்த இலக்குகளை அடைய வளரும் நாடுகளுக்கு எரிபொருட்களை கலந்து பயன்படுத்தும் சுதந்திரம் தேவை.

## முதல் பசுமை விமான நிலையம்

- அருணாச்சல பிரதேசத்தில் முதல் பசுமை விமான நிலையத்தை நவம்பர் 19 ஆம் தேதி திறந்து வைத்த பிரதமர் நரேந்திர மோடி நாட்டின் புதிய அணுகுமுறைக்கு இது உதாரணம் என பெருமிதமாக தெரிவித்தார்.
- சீனாவின் எல்லையில் அமைந்துள்ள அருணாச்சல பிரதேச மாநில தலைநகர் இடாநகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ஹலோங்கியில் பசுமை விமான நிலையம் அமைக்க கடந்த 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.
- கட்டுமானப் பணி முடிந்ததையடுத்து, இந்த விமான நிலையத்தை பிரதமர் மோடி நவம்பர் 19 அன்று திறந்து வைத்தார். இது இம்மாநிலத்தின் முதல் பசுமை விமான

நிலையம் ஆகும் இதற்கு டோனி போலோ விமான நிலையம் என பெயரிடப்பட்டுள்ளது.

## பொருளாதாரம்

### சூப்பர் பணக்காரர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

- இந்தியாவின் நுகர்வோர் பொருளாதாரம் மீதான மக்கள் ஆராய்ச்சி (PRICE) என்ற சிந்தனை அமைப்பின் சார்பில், 'இந்தியாவின் நடுத்தர பிரிவு மக்கள் வளர்ச்சி' என்ற பெயரில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- கடந்த 1994 - 95 முதல் 2020 - 21 வரை இந்தியர்களின் பொருளாதார நிலை எப்படி உயர்ந்துள்ளது என்பது குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் 2021 இல் வருமான அடிப்படையில் மக்கள் 7 குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.
- குறைந்த பட்சமாக குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.25 இலட்சத்துக்குக் கீழ் உள்ளவர்கள் மிகவும் வறுமையானவர்கள் என்றும் அதிகபட்சமாக ரூ.2 கோடிக்கு மேல் குடும்ப வருமானம் கொண்டவர்கள் சூப்பர் பணக்காரர்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டனர்.
- ரூ. 5 லட்சம் முதல் ரூ. 30 லட்சம் வரையில் குடும்ப ஆண்டு வருவாய் ஈட்டுவோர் நடுத்தர பிரிவு மக்கள் என பிரிக்கப்பட்டனர்.
- இதன்படி 1994 – 95 இல் 98 ஆயிரமாக இருந்த சூப்பர் பணக்கார குடும்பங்கள் எண்ணிக்கை 2021 இல் 18 லட்சமாக அதிகரித்துள்ளது. இதில் 6.4 லட்சத்துடன் மகாராஷ்டிரா முதலிடம் பிடித்துள்ளது. டெல்லி (1.81 லட்சம்), குஜராத் (1.41 லட்சம்), தமிழ்நாடு (1.37 லட்சம்), பஞ்சாப் (1.01 லட்சம்) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

- நடுத்தர பிரிவு மக்கள் எண்ணிக்கை 14 லிருந்து 31 % ஆக உயர்ந்துள்ளது. அதாவது நாட்டு மக்களில் 3 இல் ஒருவர் நடுத்தர பிரிவில் உள்ளனர்.
- மிகவும் வறுமையானவர்கள் கார் வாங்க முடியாத நிலையில் உள்ளனர். ரூ. 1.25 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை வருவாய் ஈட்டும் 10 இல் 5 பேர் மோட்டார் வாகனம் வைத்துள்ளனர்.
- ரூ. 5 லட்சம் முதல் ரூ. 15 லட்சம் வரை வருவாய் ஈட்டும் 10 இல் 3 குடும்பத்தினர் கார் வைத்துள்ளனர். ரூ. 30 லட்சத்துக்கு மேல் வருவாய் ஈட்டும் பணக்கார குடும்பத்தினர் அனைவரும் கார் வைத்துள்ளனர். இவ்வாறு அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

## தேசிய முதலீடு, உள் கட்டமைப்பு நிதியம் ஜப்பான் வங்கி இடையே ஒப்பந்தம்

- தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்துக்கும் (NIIF) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கு இடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளன.

### நிதி கட்டமைப்பு

- இந்த ஒப்பந்தத்தின்படி, இவ்விரு அமைப்புகளும் இந்தியாவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் திட்டங்களில் முதலீடு செய்யும். இதற்கென்று இந்தியா - ஜப்பான் நிதி கட்டமைப்பு உருவாக்கப்படும்.
- இந்தப் புரிந்தணர்வு ஒப்பந்தம், இந்தியா மற்றும் ஜப்பான் நிறுவனங்கள் இணைந்து புதிய முதலீடுகளை இந்தியாவில் மேற்கொள்ள வழி செய்யும் அந்த வகையில் இவ்விரு நாடுகளிடையிலான தொழில் உறவை வலுப்படுத்துவதாக இந்த ஒப்பந்தம் அமையும் என்று கூறப்படுகிறது.

## 6.8 கோடி ஐ. டி. ரிட்டர்ன் தாக்கல்

- 2021 – 22 ஆம் நிதி ஆண்டுக்கான வருமான வரி (IT) ரிட்டர்ன் தாக்கல் செய்ய தனி நபர்களுக்கு கடந்த ஜூலை 31 வரையிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நவம்பர் 7 வரையிலும் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. காலக்கெடுவைத் தவற விட்டவர்கள் டிசம்பர் 31 க்குள் அபராதத்துடன் வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
- இந்நிலையில் இதுவரையில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான தகவலை மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ளது. அதன்படி, இதுவரையில் 6.85 கோடி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
- 2021 – 22 ஆம் ஆண்டுக்கு 7.14 கோடி வருமான வரி ரிட்டர்ன் விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.
- நடப்பு நிதி ஆண்டில் ரூ. 14.20 லட்சம் கோடி நேரடி வரி வசூல் செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது. நவம்பர் 10 ஆம் தேதி நிலவரப்படி வசூல் ரூ.10.54 லட்சம் கோடியாக உள்ளது.

## 'ரோஜ்கார் மேளா' வேலைவாய்ப்பு திட்டம்

- மத்திய அரசின் பல்வேறு துறைகளில் 71,000 பேருக்கு பணி ஆணைகளை பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 22 ஆம் தேதியன்று வழங்கிறார்.
- வரும் 2030 ஆம் ஆண்டில் இந்தியாவில் குறைந்தபட்சம் 9 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவது அவசியம் என்று சர்வதேச நிதி அமைப்புகள் சுட்டிக் காட்டி உள்ளன.

- முத்ரா யோஜ்னா உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் தொழில் தொடங்க கடன் வழங்கப்பட்டு வருகிறது.
- அதே நேரம் இந்திய இளைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக நாடு முழுவதும் இளைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்த ரூ.12,000 கோடியில் 'ஸ்கில் இந்தியா' (Skill India) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இதனிடையே மத்திய அரசு துறைகளில் காலியாக உள்ள இடங்கள் குறித்து பிரதமர் மோடி கடந்த ஜுன் மாதம் விரிவான ஆய்வு நடத்தினார்.
- நாடு முழுவதும் 45 இடங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் புதிய ஊழியர்கள் பணியாற்ற உள்ளனர். மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பணிகளுக்கான ஆணையை பிரதமர் வழங்க உள்ளார்.

## சர்வதேச மந்தநிலையிலும் வேகமான பொருளாதார வளர்ச்சியில் இந்தியா

- சர்வதேச மந்தநிலையிலும் வேகமான காணும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா உள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் (GDP) 6.6 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- இந்த வளர்ச்சி 2023 – 24 ஆம் நிதியாண்டில் 5.7 சதவீதமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் சீனா, சவுதி அரேபியாவை உள்ளடக்கிய ஜி 20 பொருளாதாரங்களைவிட இந்தியாவின் வளர்ச்சி அதிகமாகவே இருக்கும்.

- மேலும் 2024 – 25 இல் இந்தியாவின் வளர்ச்சி 7 சதவீத என்ற அளவில் இருக்கும் என பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடுக்கான அமைப்பு (OECD) அதன் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பா கடுமையாக வீழ்ச்சியடைந்து வரும் சூழலில், 2023 இல் வளர்ச்சி என்பது பெரும்பாலும் வளரும் நாடுகளைக் கொண்ட ஆசிய சந்தையைச் சார்ந்தே இருக்கும்.
- பின்தங்கிய சமூக - பொருளாதார குழுக்கள் உட்பட பெரும்பான்மையான மக்களிடம் நிதி சேவைகள் கொண்டு சேர்க்கப்பட்டதால் இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
- பொதுச் செலவினத்தில் வெளிப்படைத் தன்மை, செயல்திறன் ஆகியவற்றை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதே போன்று கல்வி, சுகாதாரத்துக்கு அதிக வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளதாக OECD ஆய்வில் கூறியுள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### ஏவுகணைகளை வானில் இடைமறித்து தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றி

- ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் – டிஆர்டிஓ (DRDO) எதிரி நாட்டு போர் விமானங்கள், ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து தகர்க்கும் ஏடி - 1 ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- எதிரி நாட்டு போர் விமானங்கள், ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து தகர்ப்பதற்காக ஏடி - 1 ரக ஏவுகணையை டிஆர்டிஓ தயாரித்தது. இதில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நவீன கட்டுப்பாட்டு கருவிகள், நேவிகேஷன் கருவிகள் உள்ளன.

இந்த ஏவுகணை ஒடிசா கடற்கரைக்கு அப்பால் உள்ள ஏபிஜே அப்துல்கலாலம் தீவில் 2022 நவம்பர் 02 இல் சோதித்து பார்க்கப்பட்டது.

- இந்த ஏவுகணை செல்லும் பாதை சென்சார்கள், ரேடார்கள், டெலிமெட்ரி மற்றும் எலக்ட்ரோ ஆப்டிக்கல் கண்காணிப்பு நிலையங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டன. இலக்கை நோக்கி இந்த ஏவுகணை துல்லியமாக சென்றது.
- ஏடி - 1 ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதற்காக டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

## ஆர்எல்வி விண்கலத்தை ஓடுதளத்தில் இறக்கி பரிசோதிக்க இஸ்ரோ திட்டம்

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மீண்டும் பயன்படுத்தக் கூடிய விண்கலத்தை (ஆர்எல்வி) ஓடுதளத்தில் தரையிறங்க வைக்கும் சோதனையை இஸ்ரோ விரைவில் மேற்கொள்ளவுள்ளது.
- மீண்டும் பயன்படுத்தக் கூடிய விண்கலத்தை (ஆர்எல்வி) விண்ணில் ஏவி, அதை கடலில் இறக்கும் சோதனையை இஸ்ரோ கடந்த 2016 ஆம் ஆண்டு மேற்கொண்டது. இந்நிலையில் ஆர்எல்வி விண்கலத்தை ஓடுதளத்தில் விமானம் போல் தரையிறக்கும் சோதனையை இஸ்ரோ விரைவில் மேற்கொள்ளவுள்ளது. இந்த சோதனை கர்நாடகா மாநிலத்தின் சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள விமான தளத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.
- இந்த பரிசோதனையின் போது ஆர்எல்வி விண்கலம் ஹெலிகாப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு ஓடுதளத்திலிருந்து 3 அல்லது 5 கி.மீ. தூரத்தில் இருந்து விடுவிக்கப்படும்.

- அதன் பின் ஆர்எல்வி விண்கலம் விமானம் போல் பறந்து வந்து, விமான தளத்தின் ஒடும் பாதையில் சக்கரங்கள் உதவியுடன் தரையிறங்கும். இது போன்ற பரிசோதனையை இஸ்ரோ மேற்கொள்வது இதுவே முதல்முறை.
- இது குறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறுகையில், "பருவநிலை தற்போது நன்றாக இல்லை, சாதகமான சூழ்நிலை நிலவும் போது, ஆர்எல்வி விண்கலத்தை ஓடுதளத்தில் தரையிறக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்படும்" என்றார்.

## இந்திய 2டிஜி மருந்து

- கரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு நெஞ்சில் எரிச்சல், ரத்தம் உறைதல், மாரடைப்பு போன்ற பாதிப்புகள் குறைந்தது ஓராண்டுக்கு ஏற்படுகிறது. கரோனா வைரஸில் உள்ள ஒரு குறிப்பிட்ட புரோட்டீன், இதய திசுக்கள் பாதிப்புக்கு காரணம் என்பதை அமெரிக்காவின் மேரிலேண்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- இந்த பாதிப்பை குணப்படுத்த இந்தியாவில் 'டாக்டர் ரெட்டிஸ் லேபரெட்டரி' ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்துடன் (டிஆர்டிஓ) இணைந்து '2டிஜி' (2 - டியாக்சி – டி - குளுக்கோஸ்) என்ற பவுடர் மருந்தை உருவாக்கினார்.
- 2டிஜி மருந்துக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் இன்னும் அனுமதி அளிக்கவில்லை.

## விக்ரம் எஸ்

- இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான 'விக்ரம் எஸ்' ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நவம்பர் 18 அன்று காலை 11.30 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

- ஹைதராபாத்தை சேர்ந்த ஸ்கைரூட் எனும் ஏரோஸ்பேஸ் நிறுவனம் தனது ராக்கெட்களை விண்ணில் செலுத்துவதற்காக இஸ்ரோவுடன் செலுத்துவதற்காக இஸ்ரோவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.
- அதைத் தொடர்ந்து, புதிய ராக்கெட் தயாரிப்பு பணிகளில் கடந்த 2 ஆண்டுகளாக ஸ்கைரூட் ஈடுபட்டு வந்தது. தொடர்ந்து, வெவ்வேறு எடைகளை சுமந்து செல்லக் கூடிய 3 விதமான ராக்கெட்கள் ஸ்கைரூட் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டன.

### பிஎஸ்எல்வி சி - 54 ராக்கெட் வெற்றி

- பிஎஸ்எல்வி சி - 54 ராக்கெட் மூலம் ஓசியான்சாட் - 3 மற்றும் எட்டு நானோ செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.
- பூட்டான்சாட், பிக்ஸலின் ஆனந்த், துருவர் ஸ்பேஸின் இரண்டு தைபோல்ட், யுஎஸ்ஏ ஸ்பேஸ்ப்டைட்டின் நான்கு ஆஸ்ட்ரோகாஸ்ட் செயற்கைக்கோள்கள் ஆகியவையே அந்த எட்டு நானோ செயற்கைக்கோள்களாகும்.
- இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே கணித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவைப்படும் தொலையுணர்வு வகை விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.
- அதன்படி கடல் ஆய்வுப் பணிகளுக்காக 1999, 2009 இல் ஓஷன்சாட் - 1, ஓஷன் சாட் - 2 செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டன. ஓஷன் சாட் - 1 செயற்கைக்கோளின் ஆய்வுக் காலம் 2011 ஆம் ஆண்டுடன் முடிந்து விட்டது. ஓஷன் சாட் - 2 செயற்கைக்கோளில் சில கருவிகள் பழுதானதால் அதிலிருந்து தகவல்களைப் பெற முடியாத நிலை உள்ளது.

- எனவே புவி கண்காணிப்பு, கடலாய்வு செயல்பாடுகளுக்காக, அதிநவீன ஓஷன்சாட் - 3 (இஓஎஸ் - 06) செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்து, பி.எஸ்எல்.வி சி - 54 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டது. ராக்கெட் ஏவுதலுக்கான 25 மணி 30 நிமிட நேர கவுன்ட் - டவுன் நவம்பர் 26 தொடங்கியது.
- முதன்மை செயற்கைகோளான இஓஎஸ் 1,117 கிலோ எடை கொண்டது. இதன் மூலம் கடலின் நிறம், மேற்பரப்பு வெப்பநிலை, காற்றின் வேக மாறுபாடு, வளி மண்டலத்தில் நிகழும் ஒளியியல் மாற்றங்கள் உள்ளிட்டவற்றைக் கண்காணித்து, தரவுகளைப் பெற முடியும்.
- இது தவிர ஐஎன்எஸ் - 2பி செயற்கைக் கோள் இந்தியா – பூடான் ஆகிய நாடுகளின் கூட்டிணைப்பில் தயாரிக்கப்பட்டது. கடந்த 2019 இல் பிரதமர் நரேந்திர மோடி அரசு முறை பயணமாக பூடான் சென்ற போது, இரு நாடுகள் இடையே செயற்கைக் கோள் கூட்டு ஆராய்ச்சி மேம்பாட்டுக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அதன் அடிப்படையில் தற்போது ஐஎன்எஸ் - 2பி செயற்கைக் கோள் ஏவப்பட்டு உள்ளதாகவும், இது பூடானை வலம் வந்து ஆய்வு மேற்கொள்ளும் எனவும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## உலகிலேயே முதன்முதலாக மூக்கு வழி கரோனா தடுப்பு மருந்துக்கு அனுமதி

- உலகிலேயே முதல்முறையாக மூக்கு வழியாக செலுத்தப்படும் கரோனா தடுப்பு மருந்துக்கு மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கோவாக்சின் தடுப்பூசியை உருவாக்கிய பாரத் பயோடெக் நிறுவனம் தற்போது மூக்கு வழியாகச் செலுத்தப்படும் iNCOVACC கரோனா தடுப்பு மருந்தை வாஷிங்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது.

- 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த தடுப்பு மருந்தை வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிரிகளின் ட்ரோன்களை அழிக்க பருந்துகளை பயன்படுத்தும் இந்திய ராணுவம்

- பாகிஸ்தான் தரப்பில் இருந்து ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாபில் ட்ரோன்கள் மூலம் போதைப் பொருள், துப்பாக்கிகள் மற்றும் ரூபாய் நோட்டுகள் வீசப்படுவது வழக்கமாக உள்ளது.
- இந்நிலையில் ராணுவ அதிகாரிகள் கூறும்போது, “இந்திய ராணுவம் தனது நடவடிக்கைகளுக்கு மோப்ப நாய்களுடன் பயிற்றுவிக்கப்பட்ட பருந்துகளையும் பயன்படுத்தி வருகிறது. பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீரில் எல்லையைத் தாண்டி இந்திய பகுதிகளுக்கு வரும் ட்ரோன்களின் அச்சுறுத்தலை சமாளிக்க பாதுகாப்புப் படையினருக்கு இது உதவியாக உள்ளது” என்றனர்.
- உத்தராகண்ட் மாநிலம் அவுலியில் இந்தியா – அமெரிக்கா இடையிலான 18 வது கூட்டு ராணுவப் பயிற்சி 26.11.2022 தொடங்கியது. இதில் பருந்துகளை பயன்படுத்தி எதிரிகளின் ட்ரோன்களை வீழ்த்துவது எப்படி என்பது குறித்த செயல் விளக்கத்தை இந்திய ராணுவம் அளித்தது. இத்தகைய நோக்கத்துக்கு இந்தப் பறவையை பயன்படுத்துவது இதுவே முதல்முறை என்று ராணுவ அதிகாரிகள் கூறினர்.
- இரு நாடுகளின் ராணுவங்களுக்கு இடையே போர் உத்திகள் மற்றும் நட்பங்களை பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் இந்த பயிற்சி நடத்தப்படுகிறது.

# தமிழ்நாடு

## வாரணாசியில் காசி தமிழ்ச் சங்கமம்

- உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியை பிரதமர் மோடி நவம்பர், 19 தொடங்கி வைத்தார். அவர் பேசும் போது "தமிழ் மொழியைக் காக்க வேண்டியது இந்தியர்கள் அனைவரின் கடமை" என்றார். தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக ஒரு மாதத்துக்கு நடைபெற உள்ளன.
- மத்திய அரசின் கல்வித் துறை சார்பில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க தமிழகத்தில் இருந்து 2,500 க்கும் மேற்பட்டோர் வாரணாசி சென்றனர்.
- செம்மொழி தமிழாய்வு நிறுவனம் 13 மொழிகளில் மொழி பெயர்த்துள்ள திருக்குறள் நூல்களை பிரதமர் வெளியிட்டார். தமிழர்களின் கலாச்சாரம் குறித்த குறும்படத்தையும் பார்த்தனர்.
- அதன்படி சமஸ்கிருதம், இந்தி, மராத்தி, ஒடியா, மலையாளம், சவுராஷ்டிரி, நரிக் குறவர்களின் வாக்ரிபோலி, படுகு, நேபாளி, அரபி, உருது, பாரசீகம், கெமர் ஆகிய 13 மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## கங்கை கொண்டான் சிப்காட்டில் உணவுப் பூங்கா

- கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் வணிக வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா, மத்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பிரதான் மந்திரி கிசான் சம்படா யோஜனா திட்டத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தை ரூ.77.02 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் மாநில அரசிடமிருந்து பெறப்பட்டு திட்ட செயலாக்கம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- உணவு பூங்காவில் அமைக்கப்படும் பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகள், சிப்காட் – சிட்கோ கொள்கையின் படி நிலம், தேவைக்கோற்ப தண்ணீர் வசதி, தடையில்லா மின்சாரம், தமிழ்நடு உணவு பதப்படுத்தப்படும் கொள்கையின்படி முதலீட்டு மானியம், முதலீட்டு மூலதனத்துக்கு பெறப்பட்ட கடனில் 3 சதவீத வட்டி விலக்கு, நடுத்தர முதலீட்டுக்கான சிறப்பு மானியம், முத்திரை கட்டண விலக்கு, சந்தை கட்டணத்தில் விலக்கு, தரம் பிரித்தல் மற்றும் பயிற்சிக்கான தொழில்நுட்ப உதவி, தரச் சான்றிதழ் பெறுதல் மற்றும் காப்புரிமை பதிவு செய்வதில் உதவி, போக்குவரத்து உதவி, ஏற்றுமதி ஊக்கத்தொகை தொழிலாளருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மேம்பாடு தர பரிசோதனை ஆய்வகங்கள் போன்ற வசதிகளை பெறலாம்.

## பன்னாட்டு, தேசிய போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு ஊக்கத்தொகை

- 2022 ஆம் ஆண்டு கொலம்பியாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற டி.செல்வபிரவு, கலப்பு தொடர் ஓட்டப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற பரத் ஸ்ரீதர், இந்தோனேசியாவின் ஜகார்தாவில் நடைபெற்ற ஆசிய கோப்பை ஹாக்சி போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கம் வென்ற தமிழகத்தை சேர்ந்த வீரர்கள் எஸ்.மாஹீஸ்வரன், எஸ்.கார்த்திக் மற்றும் பல்வேறு போட்டிகளில் வென்ற 190 வீரர்கள், வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ.4.85 கோடி மதிப்பில் ஊக்கத்தொகை வழங்கினார்.

- விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்கவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்று வெற்றி பெற, அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது.
- இந்த அரசு பொறுப்பேற்றதில் இருந்து இன்று வரை 1,433 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.10 கோடியே 90 லட்சம் மதிப்பில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 24 வகையான விருதுகள்

- தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில் 24 வகையான விருதுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு பல விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகிறது. அவ்வகையில், தமிழக அரசின் 2023 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான 24 வகையான விருதுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது (3 விருதுகள்), பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திரு.வி.க விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, தமிழ்த் தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா, விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, உமறுப்புலவர் விருது, ஜி.யு.போப் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது.

- சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (10 விருதுகள்), சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலையடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, காரைக்கால் அம்மையார் விருது, சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது, தமிழ்ச் செம்மல் விருதுகள் (38 விருதுகள் மாவட்டத்துக்கு ஒன்று வீதம்) உள்ளிட்ட 24 வகையான விருதுகள் வழங்கப்படவுள்ளது.

## பாரதியார் நினைவகம்

- உத்தர பிரதேசம் வாரணாசியின் ஹனுமர் படித்துறை பகுதியில் பாரதியார் இளம் வயதில் வாழ்ந்த இல்லம் உள்ளது. 'சிவ மடம்' என்றழைக்கப்படும் இங்கு பாரதியார் நான்கரை ஆண்டுகள் வாழ்ந்தார்.
- பாரதியார் இல்லத்துக்கு மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் நேரில் சென்றார். அவர்களது இல்லத்தில் ஒரு பகுதியை நினைவகமாக மாற்றும் விருப்பத்தையும் வெளியிட்டார்.
- இதையடுத்து பாரதியார் குடும்பத்தினருடன் வாரணாசி மாவட்ட ஆட்சியர் எஸ். ராஜலிங்கம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் முழு வீட்டையும் புனரமைப்பதுடன் அதன் கீழ் பகுதியை மட்டும் நினைவகமாக மாற்றுவது என பெருந்திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.
- பாரதியாரின் இலக்கியம், கவிதை படைப்புகள், சுதந்திரப் போராட்டத்தின் பங்கு, அவர் செய்த சமுதாயப் புரட்சி உள்ளிட்டவை நினைவகத்தில் முக்கியத்துவம் பெறும். ஹோலோகிராமில் பாரதி வீட்டில் நடப்பது போல காட்சி அமைக்கும் திட்டமும் உள்ளது.
- பாரதியாரின் பிறந்த தினமான டிசம்பர் 11 ஆம் தேதியை தேசிய மொழிகள் தினமாக கொண்டாட மத்திய அரசு முடிவு செய்து அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

- பாரதியாரின் இல்லத்தை நினைவகமாக மாற்ற அனுமதி அளிக்க கோரி வாரணாசி மாவட்ட நிர்வாகத்திடம் தமிழக அரசு சார்பில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு

### கத்தார் உலகக் கோப்பை கால்பந்து

- சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) நடத்தும் 22 வது உலக கோப்பை கால்பந்து தொடர் வரும் 20 ஆம் தேதி கத்தாரில் கோலாகலமாக தொடங்குகிறது.
- ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு கோடிக்கணக்கான ரசிகர்கள் கண்டு களிக்கும் இந்த 'கால்களின்' திருவிழாவை பிரம்மாண்டமாக நடத்த கத்தார் முழு அளவில் தயாராகி உள்ளது. இதற்காக கத்தார் சுமார் 12 ஆண்டுகளை செலவிட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டுகளில் போட்டியை நடத்தும் நாட்டை தேர்வு செய்வதற்கான ஏலம் நடைபெற்றது. இதில் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட பலம் வாய்ந்த நாடுகளை பின்னுக்குத் தள்ளி போட்டியை நடத்தும் வாய்ப்பை பெற்றது கத்தார்.

## முக்கிய நபர்கள்

### சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளர்

- சுதந்திரத்துக்குப் பிறகு 1952 இல் முதல் மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. தட்பவெப்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு இமாச்சல பிரதேசத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் 1951 அக்டோபரில் தேர்தல் நடத்தப்பட்டது.
- அப்போது சின்னவூர் மாவட்டம் மண்டி மக்களவை தொகுதிக்கு உட்பட்ட கல்பா வாக்குச் சாவடியில் பள்ளி ஆசிரியராக இருந்த ஷியாம் சரண் நேகி காலை 7 மணிக்கு

முதல் வாக்காளராக தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார். தற்போது அவருக்கு 106 வயதாகிறது.

- இந்த சூழலில் இமாச்சல் பேரவைத் தேர்தல் வரும் 12 ஆம் தேதி நடைபெறுகிறது. வயது முதுமை, உடல்நலக் குறைவு காரணமாக இந்த முறை வாக்குச் சாவடிக்கு செல்ல முடியாத நிலையில் நேகி உள்ளார். இதைத் தொடர்ந்து 2022 நவம்பர் 02 அன்று அவர் தபால் வாக்கினை செலுத்தினார்.
- இதுவரை நடைபெற்ற ஒரு தேர்தலில் கூட அவர் வாக்களிக்கத் தவறியதில்லை.

## டி.ஒய்.சந்திரசூட்

- உச்ச நீதிமன்றத்தின் 50 வது தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திரசூட் 9.11.2022 அன்று பதவியேற்று கொண்டார்.
- உச்ச நீதிமன்றத்தின் 49 வது தலைமை நீதிபதியாகப் பதவி வகித்த யு.யு.லலித் 8.11.2022 அன்று ஓய்வு பெற்றார். இதையடுத்து அவருக்கு அடுத்தபடியாக மூத்த நீதிபதியாக உள்ள தனஞ்செய் யஷ்வந்த் (டி.ஒய்) சந்திரசூட் 50 வது தலைமை நீதிபதியாக நவம்பர் 09 ஆம் நாள் பதவியேற்றுக் கொண்டார்.
- குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக யு.யு.லலித் கடந்த ஆகஸ்ட் 27 ஆம் தேதி பதவியேற்றார். அவரின் பணிக் காலம் 2022, நவம்பர் 8 நிறைவடைந்தது. ஆனால் குருநானக் ஜெயந்தியையொட்டி உச்ச நீதிமன்றத்துக்கு விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தலைமை நீதிபதி யு.யு.லலித்துக்கு 2022, நவம்பர் 7 கடைசி பணி நாளாக அமைந்தது.

## அருண் கோயல்

- புதிய தேர்தல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அரண் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகம் நவம்பர் 19 தேதியன்று வெளியிட்ட அறிக்கையில், ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அருண் கோயலை, தேர்தல் ஆணையராக குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். அவர் பொறுப்பேற்கும் நாளில் இருந்து இந்த உத்தரவு அமலுக்கு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பஞ்சாப் மாநிலத்தின் கடந்த 1985 ஆம் ஆண்டு ஐஎஸ்எஸ் அதிகாரி அருண் கோயல். இவர் மத்திய அரசு செயலாளராக பணியாற்றியுள்ளார். மத்திய அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளர் பதவியிலிருந்து இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.
- இவர் தலைமை தேத்ல் ஆணையர் ராஜீவ் குமார் மற்றும் தேர்தல் ஆணையர் அனுப் சந்திரா பாண்டே ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவார்.

## தமிழறிஞர் அவ்வை நடராசன் காலமானார்

- அவ்வை நடராசன் மிகச் சிறந்த தமிழறிஞர், சிந்தனையாளர், பேச்சாளர், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமைப் பெற்றவர், இவர் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதி பிறந்தார்.
- தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான அவ்வை நடராசன் (87) வயது முதிர்வின் காரணமாக சென்னையில் நவம்பர் 21 அன்று காலமானார்.

## அன்வர் இப்ராகிம்

- மலேசியாவின் 10 வது பிரதமராக சீர்திருத்தவாத தலைவர் அன்வர் இப்ராகிம் (75) நவம்பர் 24 ஆம் தேதியன்று பொறுப்பேற்றார். அவருக்கு மலேசிய மன்னர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- மலேசியாவில் சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் எதிர்கட்சி தலைவராக இருந்த அன்வர் இம்ராகிமின் நம்பிக்கை கூட்டணி 82 இடங்களில் வென்றது. இங்கு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க 112 உறுப்பினர்கள் தேவை. முன்னாள் பிரதமர் முகைதீன் யாசின் தலைமையிலான தேசிய கூட்டணி 73 இடங்களில் மட்டுமே வென்றது. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் சூழல் ஏற்பட்டது.
- இதையடுத்து மலேசிய மன்னரின் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையில், வெற்றியாளர்கள் அனைத்தையும் வெல்வதில்லை. தோல்வியடைபவர்கள் அனைத்தையும் இழப்பதில்லை. அன்வர் இப்ராகிம் தலைமையில் புதிய அரசு அடக்கத்துடன் செயல்பட வேண்டும்.
- மலேசியாவில் நிலையான அரசை உறுதி செய்ய எதிர்க் கட்சிகள் இணக்கம் தெரிவிக்க வேண்டும். பெரும்பான்மை ஆதரவை பெறும் அன்வர் இப்ராகிம் பிரதமராவதற்கு மன்னர் ஒப்புதல் தெரிவித்துள்ளார்" என கூறியுள்ளது. இதையடுத்து 10 வது பிரதமராக அரண்மனையில் நவம்பர் 24 இல் நடந்த நிகழ்ச்சியில் இப்ராகிம் பொறுப்பேற்றார்.

# முக்கிய விருதுகள்

## ரிஷான் ஷெரீப்

- இலங்கை அரசு வழங்கி வரும் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய இலக்கிய விருது இலங்கைத் தமிழ் எழுத்தாளர் எம்.ரிஷான் ஷெரீப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது மொழிபெயர்ப்பில் வெளியான 'அந்திம காலத்தின் இறுதி நேசம்' நூல், சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்புக்கான விருதை வென்றது.
- இலங்கை அரசு சாகித்திய தேர்வாகியிருந்த ரிஷான் ஷெரீப் மொழிபெயர்த்த 'சுருக்கப்பட்ட நெருங்கதைகள்', 'கிகோர்' ஆகிய நூல்களும் இறுதிச் சுற்றுக்குத் தேர்வாகியிருந்ததால் அதற்கான சான்றிதழ்களும் அவருக்கு வழங்கப்பட்டன.

## தமிழறிஞர் க. நெடுஞ்செழியன்

- திருச்சி மாவட்டம் அன்பில் படுகை கிராமத்தைச் சேர்ந்தவர் தமிழறிஞர் மற்றும் பேராசிரியர் க.நெடுஞ்செழியன் (79). தமிழில் முதுகலைப் பட்டம் பெற்று அரசு கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.
- பின்னர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறை தலைவராகவும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உள்ள பெரியார் உயராய்வு மையத்தின் தலைவராகவும் பணியாற்றிய அவர் 20 க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்டவர்.
- அண்மையில் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருதை' முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பெற்றார். திராவிட இயக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்

## எழுத்தாளர் இமையத்துக்கு குவெம்பு விருது

- கடலூர் மாவட்டத்தை சேர்ந்த எழுத்தாளரும், ஆசிரியருமான இமையம் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நாவல், சிறுகதை, கட்டுரைகளை எழுதி வருகிறார். தனது முதல் நாவலான 'கோவேறு கழுதைகள்' மூலம் தமிழ் இலக்கிய தளத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தினார்.
- இமையத்தின் செடல், செல்லாத பணம், சாவு சோறு, பெத்தவன் உள்ளிட்ட படைப்புகள் வாசகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. ஆங்கிலம் மட்டுமல்லாமல் கன்னடம், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு உள்ளிட்ட மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.
- "செல்லாத பணம்" என்ற நாவலுக்காக 2020 ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது இமையத்துக்கு வழங்கப்பட்டது.
- இந்நிலையில் கர்நாடகாவில் கன்னட தேசிய கவி குவெம்பு பெயரில் அமைக்கப்பட்டுள்ள நினைவு அறக்கட்டளை சார்பாக வழங்கப்படும் 'குவெம்பு தேசிய விருது' இந்த ஆண்டு எழுத்தாளர் இமையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- வரும் டிசம்பர் 29 இல் நடைபெறும் குவெம்பு பிறந்த தினம் விழாவில் இமையத்துக்கு இந்த விருதுடன் ரூ.5 லட்சம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும் என குவெம்பு அறக்கட்டளையின் செயலாளர் கடிலால் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.